

குமரிப்பெண்களை மேடையில் ஆடவிட்டு ஜாலியாக வெற்றிலை, பாக்குகளை மென்றுகொண்டு ஜமீன்களும், மிட்டா மிராசுகளும் சொக்கிப் போய் ரசித்த பழைய சங்கதியின் நவீன வடிவம்தான் இந்த அழகிப் போட்டி.

தலைசிறந்த அழகு என்பது எது என்று மணிலாவுக்கு வந்த எட்டு பேர் ,உலகத்தின் சார்பில் தீர்மானிக்க முடியாது என்பது ஒருபக்கம் இருக்க, ஆணுக்கு எந்த விதத்திலும் குறையாமல் சம மனிதர்களாக பெண்கள் தங்களை நிரூபித்துக் கொண்டே வந்தாலும், அதை அங்கீகரிக்காமல் தொடர்ந்து அவர்களை போகப் பொருளாகவே மட்டம் தட்டி வைக்கிற வேலைதான் அழகிப்போட்டி. கோடி கோடியாக டாலர்கள் புழங்குவதால், நேர்த்தி, ஒழுங்கு, திட்டமிடுதல், அதை நியாயப்படுத்துதல் எல்லாம் வந்துவிட்டது.

ஒவ்வொரு முறையும் அழகிப் போட்டி பிலிப்பைன்சில் நடக்கும் போதும் அங்கு நடைபெறுகிற ஆட்சி முழுசர்வாதிகார ஆட்சியாகத்தான் இருக்கிறது. சுற்றுலாத்துறையை வளர்க்க , விபச்சாரத்தை வளர்க்க வேண்டும் என்ற பச்சைத்தனமான வியாபார உத்தியைப் பின்பற்றும் நாடுகளில் ஒன்றாக அது இருந்து வருகிறது.

பெண்ணுரிமை அமைப்புகள் தொடர்ந்து கண்டனக்குரலை எழுப்பி வருவதால் அண்மைக் காலமாக அழகிப்போட்டி என்பது உடலழகு மட்டுமல்ல , அறிவும் சம்பந்தப்பட்டது என்பதை காட்டிக் கொள்ள, ஒரு 'கேள்வி-ரவுண்ட்' இந்தப் போட்டிகளில் சேர்க்கப்பட்டு இருக்கிறது. இதில் வெற்றி பெறுவதற்கு ஐந்தாம் வகுப்பு மாணவனுக்குரிய அறிவே போதுமானது.

உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக சுஷ்மிதா வேண்டுமானால் பெருமைப்படலாம் (இளம் வயதிலேயே பணம் சம்பாதிக்க ஒரு எளிய வழியை அடைந்துவிட்டதற்காக) ஆனால் இந்தியாவோ, இந்தியப் பெண்களோ பெருமைப்பட இதில் எதுவுமில்லை.

சுஷ்மிதாவின் கருத்துக்கள் எல்லாம் ஏற்கெனவே இந்தியாவில் ஊறிப்போய் இருக்கிற பெண்ணடிமைத்தன கருத்துக்கள்தான். ‘இந்தியப் பெண்கள் வெளியுலகில் வேலைகளில் முன்னேறும் அதே சமயத்தில் வீட்டிலும் சிறந்த இல்லத்தரசிகளாக விளங்குவதுதான் எனக்கு மிகவும் பிடித்த அம்சம்’ என்று கூறியுள்ளார் சுஷ்மிதா சென். அதாவது ஆண்கள் வழக்கம்போல வெளி வேலைகளை மட்டும் செய்வார்கள்.ஆனால் பெண்கள் மட்டும் 'இரட்டை சுமையை' சுமக்க வேண்டும் என்பது.

ஒரு பெண் தன் உடலழகை காட்டலாம். வெளியில் வேலைக்குப் போனாலும் வீட்டை கவனிக்க வேண்டும், தியாகப்பூர்வமாய் வாழ வேண்டும் என்று சொல்லும் சுஷ் மிதாவின் வெற்றிக்காக நான் நிச்சயம் பெருமைப் பட வில்லை.

இதையெல்லாம் தாண்டி அழகிப் போட்டியில் இரண்டு விஷயம் பிடித்திருந்தது. இந்தியாவை பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு என்று சுஷ்மிதா சென் வர்ணித்தது. மற்றொன்று, போட்டியில் பங்கெடுப்பவர்கள் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தங்களின் தாய்மொழியிலும் பேசலாம் என்ற வசதியைக் கொண்டு, வெனிசுவேலா பெண் தன் தாய் மொழியில் சரளமாக பேசியது.

- செம்மலர்

ஜீலை **1994**